**கல்முனை மாநகர சபை – 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்முனை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்முனை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு )**

------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) மாநகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 44 காணிகள் மற்றும் 55 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்காததுடன் அவைகளின் பெறுமதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றன. | சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2011 - 2015 காலப்பகுதியில் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைக்காக காரைதீவு பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ரூபா 2,046,823 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | செலுத்தப்பட வேண்டிய செலவீனத்தினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | 06 விளம்பர பதாதைகளுக்காக அறவிடவேண்டிய ரூபா 308,640 தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இவ் விடயம் சீர் செய்யப்படும். | அறவிடப்பட வேண்டிய வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | பெறவேண்டிய மற்றும் முற்பணமாக பெற்ற விளம்பரக் கட்டணங்கள் முறையே ரூபா 3,130,575 மற்றும் ரூபா 372,205 என்பவைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இவ் விடயம் சீர் செய்யப்படும். | கிடைக்கப்பெற்ற வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்ட ரூபா 1,406,487 பெறுமதியான நிர்மாண வேலைகளின் பெறுமதிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் இவ் விடயம் சீர் செய்யப்படும். | பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண வேலைகளின் பெறுமதிகள் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | சேமிப்பு வைப்பின் மூலம் பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 13,876 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் இவ் விடயம் சீர் செய்யப்படும். | வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 4,368,372 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 18,437,411 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 3,729,893 வைப்புத் தொகைகளினைக் கொண்ட 04 செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளினை மீள செயற்படுத்துவதற்கு அல்லது அத்தொகையினை சபையின் வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் இவ்விடயம் சீர் செய்யப்படும். | வைப்பு மீதிகளை ஆக்கப்பூர்வமாக முதலீடு செய்யப்படல் வேண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

-----------------------------

### 2.3.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| **(அ) வீதவரி மற்றும் வரி** | | |
| மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 252(1)(ஆ) பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 47,900 அசைவற்ற ஆதனம் மற்றும் காணிகள் மீது ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்பட வேண்டிய சோலைவரி ரூபா 91.6 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்காததுடன் சோலை வரியினை செலுத்தாத 14,769 ஆதன உரிமையாளர்களுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது அறவிடப்படாத வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டில் அரச பேருந்து நிலைய கடையறை நிலுவை ரூபா 4,219,400, கல்முனை சந்தைக் கடை நிலுவை ரூபா 3,907,615, ஒன்றிணைந்த ஐக்கிய சதுக்ககடை நிலுவை ரூபா 1,735,750, வாழைப்பழ கடை நிலுவை 613,995 மற்றும் தனியார் பேருந்து கடையறை நிலுவை ரூபா 450,000 தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வருமானங்களை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) உத்தரவுப் பத்திரக் கட்டணம்** | | |
| மாநகர சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் 3,417 வியாபார நிலையங்கள் காணப்படுகின்ற போதிலும், மீளாய்வாண்டில் 1,036 வியாபார நிலையங்களிடமிருந்து ரூபா 2,461,100 தொகை மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தன. | அசாதாரண சூழ் நிலையின் காரணமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானங்களை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) விளம்பர பதாதைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| சபையின் அதிகார எல்லைக்குள் 870 விளம்பரப் பதாதைகள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் 113 விளம்பர பதாதைகளுக்கு மாத்திரமே ரூபா 539,890 தொகை அறவிடப்பட்டிருந்தன. | தற்பொழுது குறித்த வருமானம் அறவிடப்பட்டு வருகின்றது. | வருமானங்களை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2017 தொடக்கம் 2020 ஆண்டு காலப்பகுதிகளில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நீரிணைப்பினை வழங்குவதற்காக மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1,951 பயனாளிகளிடமிருந்து வெட்டப்பட்ட வீதிகளினை புனரமைப்பதற்காக ரூபா 1,401,715 தொகை அறவிடப்பட்டிருந்தும் 250 வீதிகள் மாத்திரமே சபையினால் புனரமைக்கப்பட்டிருந்தன. | தற்பொழுது சீர் செய்யப்பட்டு வருகின்றது. | வீதிகளினை சீர்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சபை நிதியைப் பயன்படுத்தி ரூபா 124,969 தொகைக்கு மாணவர்களுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2015 யூன் 30 ஆந் திகதி பாடசாலை ஒன்றுக்கு ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், அப்பொருட்கள் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் பாடசாலைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக்கு பொருட்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகறிக்கப்பட்ட ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் அனைத்து ஒப்பந்த வேலைகளும் மாநகர பொறியியலாளரினால் சான்றுறுதிபடுத்தப்பட்டு அவற்றுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் இதற்கு முரணாக ரூபா 38,862,954 பெறுமதியான 16 வேலைகள் தொழிநுட்ப உத்தியோகத்தரினால் சான்றுறுதிபடுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தற்பொழுது பொறியியலாளர்களால் சான்றுப்படுத்தப்பட்டுள்ளது. | அங்கீகறிக்கப்பட்ட ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 சபையின் உறுப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய சதுக்க கடை கட்டிடத் தொகுதியின் இலக்கம் 08 மற்றும் 10 கடையறைகள் 2018 மார்ச் முதல் சபையின் இரு உறுப்பினர்களிற்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 180 ஆம் பிரிவிற்கு முரணாக வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன. | சட்ட நடவடிக்கைக்காக சட்டப் பிரிவிற்கு கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டது. | சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |